# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 15 மடல் 7 | ஜூலை – 2015 | ₹1.00


## செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி துவக்க விழா



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமும் இணைந்து, ‘‘கால்நடைகளுக்கான தடுப்பூசி அளிப்பவர்’’, ‘‘கால்நடை மற்றும் கோழிப் பண்ணைகளில் உயிர்ப் பாதுகாப்புத் தொழில்நுட்பம்’’ குறித்த ‘‘கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி’’யின் துவக்க விழாவைத் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 20.06.2015அன்று நடத்தின. தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்து, ‘‘பயிற்சிக் கையேடு மற்றும் தானுவாஸ் தாதுப்புக் கலவையின் தாக்கம் – வெற்றிக் கதை’’ குறித்த ஆவணப் படத்தை வெளியிட்டு, தமிழ்நாடு அரசின் பகுதி–2 திட்டப் பயனாளிகளுக்கு ஒரு நாள் வயதுக் கோழிக் குஞ்சுகளை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, கால்நடை வளர்ப்பில் புதிய தொழில்நுட்பங்களைக் கைக்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தினார். தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திரு. டி. ஆப்ரகாம் இ.ஆ.ப. அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் முனைவர் சே. பிரதாபன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

## கறவை மாடு வளர்ப்பு குறித்த செயல்திறன் மேம்பாட்டுத் திட்டம்

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம், சென்னை மஹிந்த்ரா கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் லிமிடெட், எம்.எஸ். செல்லமுத்து அறக்கட்டளை மற்றும் ஆராய்ச்சி பவுண்டேஷன் ஆகியவை இணைந்து ‘‘மதுரை மாவட்டத்தில் கறவைமாடு வளர்ப்புமூலம் மனநோய் குணமடைந்தோரின் மேம்பாடு’’ குறித்த செயல்திறன் மேம்பாட்டுத் திட்டத்தை மதுரை, ஆயத்தம்பட்டி கிராமம், எம்.எஸ். செல்லமுத்து தோட்ட வளாகத்தில் துவக்கிச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் பயனாளிகளை 10.06.2015அன்று தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் அவர்கள் சந்தித்து, கலந்துரையாடினார்.

## நாடளாவிய வேளாண் அறிவியல் தமிழ்க் கருத்தரங்கம்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், புதுதில்லி வேளாண் அறிவியல் தமிழ் இயக்கத்துடன் இணைந்து, நாடளாவிய வேளாண் அறிவியல் தமிழ்க் கருத்தரங்க மாநாட்டினைத் ‘‘தமிழால் இயலும்’’ எனும் உயர்பொருண்மையில், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 13.06.2015 மற்றும் 14.06.2015ஆம் நாள்களில் நடத்தியது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்க மாநாட்டினைத் தொடங்கிவைத்து, 300 பேராளர்களின் 500 கட்டுரைகள் இடம்பெற்ற 12 நூல்களை வெளியிட்டு, விழாப்பேருரை நிகழ்த்தினார். தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் பாஸ்கரன் மணிமாறன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் பல்கலைக்கழகத் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலருமான முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வேளாண் அறிவியல் தமிழ் இயக்க நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் மு. முத்தமிழ்ச்செல்வன் அவர்கள் கருத்தரங்கின் நோக்கவுரை நிகழ்த்தினார். ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் பெ. செந்தில்குமார் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். கருத்தரங்கில் ஒன்பது தொழில்நுட்ப அமர்வுகள் நடைபெற்றன. 300க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தொடக்கவுரையுடன், பாரதிதாசன் பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர்

ச. முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் கருத்துரை அரங்கம் நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் பங்கேற்றார். நிறைவு விழாவில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் தலைமையேற்க, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் கு. இரத்னகுமார், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் புல முதல்வர் முனைவர் ச. மகிமை ராஜா, மா. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய முதன்மை அறிவியலாளர் முனைவர் நா. பரசுராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

## புதிய இணையவழிப் படிப்பு



கால்நடை மருத்துவர்களின் தொடர் கல்வி மேம்பாட்டுக்கான புதிய இணையவழி (ஆன்லைன்) படிப்புகளின் தொடக்க விழா, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 26.06.2015அன்று நடைபெற்றது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும், இலண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரியும் இணைந்து வழங்கும் இந்த இணையவழிப் படிப்புகளைப் பிரிட்டிஷ் கவுன்சில் இயக்குநர் (தென்னிந்தியா) மீக்வி பார்க்கர் அவர்கள் தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் தலைமை வகித்து, தமது தலைமையுரையில் இணையவழிப் படிப்புகளை இந்தியாவில் உள்ள ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி வழங்குவது இதுவே முதல் முறை என்றார். இலண்டன் ராயல் கால்நடை மருத்துவக் கல்லூரி, பயிற்சி இயக்குநர் முனைவர் அயோனே சில்வா ஃபெளட்சர் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

## அரசுச் செயலர் வருகை



தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலர் முனைவர் எஸ். விஜயகுமார் இ.ஆ.ப., அவர்கள் 19.06.2015 அன்று ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு வருகைபுரிந்து, கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட துறைகளின் ஆய்வகங்கள், வகுப்பறைகள் மற்றும் மாணவர் விடுதிகளைப் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் துறை இயக்குநர் திரு. டி. ஆப்ரகாம் இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மருத்துவர் ந. சுப்பையன் இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர். கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் கல்லூரியின் பணிகளை விளக்கிக்கூறினார்.

## நடமாடும் நோய்ப் பரிசோதனைக்கூட வாகனம் துவக்க விழா



பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நடமாடும் நோய்ப் பரிசோதனைக்கூட வாகனத்தைத் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 09.06.2015அன்று துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் மற்றும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

## பல்கலைக்கழகத் துணைவேந்தர் வருகை

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் புதுக்கோட்டையில் உள்ள பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்திற்கு 14.06.2015 அன்று வருகை புரிந்து மையத்தின் ஈமு, நந்தனம் – II வான்கோழி, ராமநாதபுரம் வெள்ளை இனச் செம்மறியாட்டுப் பிரிவுகள், மையத்தின் பயிற்சி வசதிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டார். இந்நிகழ்வில் பல்கலைக்கழகக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்களும் உடனிருந்தார். துணைவேந்தர் அவர்கள் செட்டிநாடு, மாவட்டக் கால்நடைப் பண்ணையும் பார்வையிட்டார்.

## உலகச் சுற்றுச்சூழல் தினம்



பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் 05.06.2015அன்று “உலகச் சுற்றுச்சூழல் தினம்” கடைப்பிடிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று, கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலச்சந்திரன், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் சி.



பாலசுப்பிரமணியன் மற்றும் மாணவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று மரக்கன்றுகள் நட்டனர். நாமக்கல் மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி ஆகியவற்றின் முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், காட்டுப்பாக்கம் கால்நடை ஊட்டச்சத்தியல் நிலையம் மற்றும் மேல்மருவத்தூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பணியாளர்கள் ஆகியோர் தமது நிலைய வளாகங்களில் மரக் கன்றுகள் நட்டனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இராமையன்பட்டி வளாகத்தில் “மரக் கன்றுகள் நடுதல்” நிகழ்ச்சியை 09.06.2015அன்று துவக்கிவைத்தார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

## அறிவியல் முறையில் நாட்டுக்கோழி வளர்ப்புப் பயிற்சி

திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் தமிழ்நாடு அரசின் பகுதி–2 திட்டத்தின்கீழ் “அறிவியல் முறையில் நாட்டுக்கோழி வளர்ப்புப்” பயிற்சி, 09.06.2015அன்று நடத்தப்பட்டது. பயிற்சியில் 38 திட்டப் பயனாளிகள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியின் நிறைவு விழாவில் பங்கேற்று, பயனாளிகளுடன் கலந்துரையாடிச் சிறப்புரையாற்றி, சான்றிதழ் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சே. பிரதாபன் மற்றும் பேராசிரியர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## விழிப்புணர்வு முகாம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், “கறவை மாடுகளின் இனப்பெருக்கத் திறனை மேம்படுத்தும் வழிமுறைகள்” குறித்த ஒரு நாள் பண்ணையாளர் விழிப்புணர்வு முகாமை, 05.06.2015அன்று நடத்தியது. மொத்தம் 500 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் முகாமில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## கருத்தரங்கு

தருமபுரி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தால் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை நிதியுதவியுடன் “கறவை மாடுகளில் இனப்பெருக்கத்திறனை மேம்படுத்தும் வழிமுறைகள்” குறித்த ஒரு நாள் கருத்தரங்கு 30.06.2015அன்று நடத்தப்பட்டது. இதில் 500 கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

## நிலப் பட்டா வழங்கல்

திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கு 0.2024 சதுர மீட்டர் அளவுக்கான நிலப் பட்டா வழங்கப்பட்டது. நிலப் பட்டாவைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் கே.எஸ். பழனிசாமி இ.ஆ.ப. அவர்களிடம் இருந்து 26.06.2015 அன்று பெற்றார்.

## பசுந்தீவனம் உற்பத்தி மையம் – திறப்பு விழா



மாதவரம் பால்பண்ணையில் உள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையில் தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூபாய் 28.85 இலட்ச செலவில் அமைக்கப்பட்ட “பசுமைக்குடில் வாயிலாகப் பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் மையத்தைப்” பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 24.06.2015அன்று துவக்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில் அனைத்துப் பல்கலைக்கழக அதிகாரிகள், பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## கோடைக்காலப் பயிற்சி

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூலகவியல் துறைமூலம் 21 நாள் கோடைக்காலப் பயிற்சி 01.06.2015 முதல் 24.06.2015 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் 4 இரண்டாம் ஆண்டு எம்.எஸ்சி. பட்ட (நூலகத் தகவலியல்) மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. பயிற்சி நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். பயிற்சியை இணை நூலகர் டாக்டர் ஜி. இரத்தினசபாபதி அவர்கள் ஒருங்கிணைத்தார்.

## உலக யோகா தினம்




சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 21.06.2015அன்று உலக யோகா தினம் கொண்டாடப்பட்டது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 48 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்களும், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் 21 நாட்டுநலப் பணித் திட்டத் தன்னார்வலர்களும் பல்வேறு யோகாசனப் பயிற்சியில் ஈடுபட்டனர். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 90க்கும் மேற்பட்ட தேசிய மாணவர் படை மாணவர்கள், சென்னை மருத்துவக் கல்லூரியின் விளையாட்டுத் திடலில் ஏற்பாடு செய்யப்பட்ட யோகாசன நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் செய்தி மடல் – ஜூலை– 2015**

Posted on 29.07.2015 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 27.07.2015

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## மக்கள் தொடர்பு ஊடகங்களின் இணைப்புக் கூட்டம்

பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககம்மூலம் மக்கள் தொடர்பு ஊடகங்களின் இணைப்புக் கூட்டம் 15.06.2015அன்று மதுரையில் நடைபெற்றது. விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் தே. தியாகராஜன் அவர்கள் பல்கலைக்கழகத்தின் பல்வேறு தொழில்நுட்பப் பரவலாக்க நடவடிக்கைகள் அகில இந்திய வானொலிமூலம் மக்களைச் சென்றடைந்ததை எடுத்துரைத்தார். சென்னை அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் முனைவர் கே. சுப்ரமணியன் மற்றும் சென்னை, கோயம்புத்தூர், காரைக்கால், கொடைக்கானல், மதுரை, புதுச்சேரி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி அகில இந்திய வானொலி நிலையங்களின் அலுவலர்கள் கூட்டத்தில் பங்கேற்று, பண்ணை வானொலிப் பள்ளியில் ஒலிபரப்பப்பட வேண்டியவற்றை அடையாளங்கண்டனர்.

## பணி ஒய்வு



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா. தானியேல் ஜாய் சந்திரன் அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 05.06.1955இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஷா. பீர்முகமது அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 10.06.1955இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகத்தின் ஒட்டுநர் (சிறப்பு நிலை) திரு. வி. சுப்ரமணி அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 15.06.1957இல் பிறந்த இவர், 34 ஆண்டும் 11 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் பால்வள அறிவியல் துறையின் தொழில்நுட்ப அலுவலர் (கட்டுமானம்) திரு. டி. அன்பழகன் அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 10.06.1957இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவப் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்நிகழ்வாய்வியல் துறையின் ஆய்வக உதவியாளர் திரு. கே. வேலு அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 03.06.1957இல் பிறந்த இவர், 33 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியல் துறையின் திறனறி பணியாளர் திருமதி பி. காசியம்மாள் அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 01.07.1955இல் பிறந்த இவர், 14 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. இ. கன்னியப்பன் அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 01.07.1955இல் பிறந்த இவர், 18 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பண்ணையின் கால முறைச் சம்பளப் பணியாளர் (சிறப்பு நிலை) திருமதி சி. வசந்தா அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 01.07.1955இல் பிறந்த இவர், 36 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுநிலைப் பட்ட ஆராய்ச்சி நிலையத்தின் திறனில்லாப் பணியாளர் திரு. பி. சீனிவாசன் அவர்கள் 30.06.2015அன்று பணி ஒய்வு பெற்றார். 15.06.1955இல் பிறந்த இவர், 18 ஆண்டும் 02 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## அறிவிப்பு

2015–2016ஆம் கல்வியாண்டில் கால்நடை மருத்துவ அறிவியலில் **தொலைநிலைக் கல்வி – இணையவழி முதுநிலைப் பட்டயப் படிப்புகளில்** சேர்வதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன. விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் குறிப்பேட்டைப் பல்கலைக்கழக இணையதளம்: **www.tanuvas.ac.in**இலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். **பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம் அளிக்க வேண்டிய கடைசி நாள்: 12.08.2015 மாலை 5.00 மணி.** மேலும் விவரங்களுக்குத் தொடர்புகொள்க: தொலைபேசி: 044–24320411; செல்பேசி: 09884136148; மின்னஞ்சல் முகவரி: pg_diploma@tanuvas.org.in/dde@tanuvas.org.in